பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 சித்திரை 21 ஜ: அவ்: 13 இதழ்: 81
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 3-5-77

# படகு விபத்தில் 11பேர் பலி!

## மேதினக் கூட்டம் முடிந்து வீடு திரும்பியவர்கள்

கொழும்பு, திங்கள் காலிமுகத் திடலில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட 11பேர் படகு விபத்தில் பலியாகினர்.

மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டபின்னர் படகில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் மொரட்டுவ கடலில் படகு கவிழ்ந்ததை அடுத்து இப்பரிதாபம் நிகழ்ந்துள்ளது.

22பேர் இப்படகில் பயணம் செய்தனர். பலியானோர் தவிர்ந்த 11பேரும் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டனர்.


இம்மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு பலபடகுகள் பாணந்துறையிலிருந்து வந்திருந்தன. (இ)

## பத்திரிகை படிப்பதில் தமிழ்நாடு தலைவர்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தந்தை செல்வாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த தமிழ்நாடு தலைவர்களான தி. மு.க. முன்னாள் அமைச்சர் திரு: பா. உ.

(6-ம் பக்கம் பார்க்க)



இடமிருந்து வலம்: மூதறிஞருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக இங்குவந்த தமிழகத் தலைவர்கள் பா. உ. சண்முகம், ஆற்காடு வீரசாமி நாஞ்சில் மனோகரன் பலாலி விமான நிலையத்தில் வரவேற்கப்படுகின்றனர். திரு குமார் பொன்னம்பலமும் கூடநிற்கிறார். (2) தந்தைக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு யாழ். நகரில் திரண்ட மக்கள் சமுத்திரத்தின் ஒரு பகுதி. (3) தந்தையின் பொன்னுடல் சிதையில் வைக்கப்பட்டுத் தீயுடன் கலக்கிறது.
(படப்பிடிப்பு: அசோக போட்டோ ஜெகநாதன்)

# தந்தையின் இடத்துக்கு யாரை நிறுத்துவது?

## தமிழர்விடுதலைக்கூட்டணிக்குதலையிடி

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தந்தை செல்வநாயகம் காலமானதைத் தொடர்ந்து அடுத்துவரும் பொதுத்தேர்தலில் யாரை வேட்பாளராக் காங்கேசன்துறைத் தொகுதிக்கு நியமிப்பதென்பதில் தமிழர்விடுதலைக்கூட்டணிக்குள் பிரச்னை எழுந்துள்ளது.**

தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. தா. திருநாவுக்கரசுவைத் தேர்தலில் போட்டியிட நிறுத்த வேண்டுமென்று ஒருசாராரும், முன்னாள்செனட்டர் நடராஜாவை நிறுத்த வேண்டுமென்று மற்றொரு சாராரும் சிறைமீண்ட இளைஞர் மாவை சேனாதிராஜாவை நிறுத்தவேண்டுமென்று இளைஞர்கள் சிலரும் வற்புறுத்தி வருகின்றனர்.

இதேசமயம் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலத்தைக் கூட்டணி ஆதரவுடன் தேர்தலில் நிறுத்தவேண்டுமென்ற கோரிகையும் எழுந்துள்ளதாகத் தெரியவருகிறது.

நிலைமையைச் சமாளித்துப் பெரியவரின் பெயரைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் கூட்டணித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## காங்கிரஸ் கமிட்டி இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், செவ்

தமிழ் காங்கிரஸ் செயல் கமிட்டி இன்று யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

யாழ். நாவலர் வீதியிலுள்ள தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு.தா. சங்கரப்பிள்ளையின் இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இக்கூட்டம் ஆரம்பமாகும்.

இக்கூட்டத்தில் கூட்டணி நியமனகுழுஉறுப்பினர்களான தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலாளர் திரு. ரி. சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கோஷ்டியினர் இன்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களைச் சந்திக்கவிருக்கின்றனர். காங்கிரஸ் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் இச்சந்திப்பு இடம் பெறவிருக்கிறது. (க-சு)

## நியமனக்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நியமனக்குழுக் கூட்டம் மறு அறிவித்தல்வரை ஒத்திப் போடப்பட்டுள்ளதாக கூட்டணி உபதலைவர்களில் ஒருவரான திரு. கா. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

இக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (க-அ)

## சிரிப்புச் சொட்டு



ஒருவர்: ஒருவர் மற்றவருக்குப் பணிந்து போகிறாரில்லையே!

மற்றவர்: ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்'' ஒரு மன்னன் மற்ற மன்னனுக்குத் தலை குனிவதில்லையே!

—சுந்தர்

## காங்கேசனில் இன்று இரங்கற் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

மறைந்த மூதறிஞரின் தேர்தல் தொகுதியான காங்கேசன்துறைத் தொகுதியில் இன்று முதலாவது இரங்கற் கூட்டம் நடைபெறுகின்றது. இக் கூட்டம் கட்டுவன் சந்திக் கருகாமையில் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பிரதம பேச்சாளர்களாக

(6ம் பக்கம் பார்க்க)



மூதறிஞர் தந்தை செல்வநாயகத்தின் இறுதி அஞ்சலி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது திரு. எம். சிவசிதம்பரம் திரு. ஆர். பிரேமதாஸ எம். பி, திரு. செ. இராசதுரை எம். பி, கலாநிதி என். எம். பெரேரா, அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், திரு. அ. அமிர்தலிங்கம், கவிஞர் காசி ஆனந்தன், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ், ஆகியோர் பேசுகையில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
படப்பிடிப்பு: பிரபா போட்டோ 'தேவா'

### மணிவாக்கு

வாழ்க்கைக்கு ஓர் இலட்சியத்தை வைத்துக்கொள்வது ஒரு காரியம். இலட்சியத்தின்படி வாழ்வது இன்னெரு காரியம்.
— காந்திமகான்


# ஈழநாடு
THE EELANADU


## ஒரு துணிச்சலான செயல்

இலங்கை வங்கி நிர்வாக சபையின் புதிய தலைவராக, ஒரு வங்கி ஊழியரான திரு. டி.ருவிரிபாலாவைத் துணிச்சலுடன் நியமித்ததற்காக நிதி அமைச்சர் பீலிக்டயஸ் பண்டாரநாயகாவைப் பாராட்டவேண்டும்.

ஊழியர் ஒருவரை உலகில் வேறெந்த வங்கியும் இவ்விதம் அதிபராக நியமித்திருக்குமா என்பது மிக சந்தேகம். அந்த ஊழியர் எந்த ஊரைச் சேர்ந்தவரென்பதோ, யாருக்கு உறவினர் என்பதோ தமக்கு ஒன்றும்தெரியாதென்றும், அவர் திறமையும், நாணயமுள்ளவர் என்பதை உணர்ந்தே அவரை இந்த உயர் பதவிக்குத்தாம் நியமித்ததாகவும் அமைச்சர் ஒரு பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்த நியமனம் எல்லா ஊழியர்களுக்கும் பெருமகிழ்ச்சி அளிப்பதுடன், அவர்களது மதிப்பையும் உயர்த்துவதாகும். அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்குமிடையே உயர்வு, தாழ்வு மனப்பிராந்திகளும் பலபல சிக்கல்களும் ஏற்படுவதுண்டு. இனி எல்லாச்சிப்பந்திகளையும் அதிகாரிகள் மனம்மாற மதித்து அவர்களையும் தக்கபடி நடத்துவதற்கு துணிச்சல் மிக்க இந்த நியமனம் தூண்டுவதாக இருக்குமென்றே நம்புவோம்.

தொழிலாளர் விழித்துக்கொண்டுவிட்டகாலம் இது. மேதினம் கொண்டாடப்படும் இச்சமயத்தில், இந்தச் செயல் தொழிலாளர், சிப்பந்திகள் முதலியவர்களுக்கெல்லாம் இன்பச் செய்தியாகவும் எதிர்காலம் பற்றி புதிய நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கவேண்டும். தொழிலாளரும் தங்களைப்போல் மனிதர்களே என்றும் உணர்ந்து அவர்களை மனிதத் தன்மையுடன், அன்புடன் முதலாளிகளும், நிர்வாகிகளும் நடத்துவதாயின், நம் நாட்டில் தொழிற்பிரச்னைகள் பெரிதும்குறையவும் தொழில் அமைதி ஏற்படவும் முடியும்.

மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டும் முறையிலே, இந்த அரிய செயலை நிதி அமைச்சர் செய்துள்ளார். சாதி, இனம் முதலிய வேற்றுமையின்றி திறமைக்கே முதலிடம் அளிப்பின் தொழிலாளரும், தங்கள் கடமைகளை உண்மையாக விசுவாசத்துடன் செய்வதுடன் நாடும், சுபீட்சமாக முன்னேற வழிபிறக்கும்.

வவுனியா கல்விக்கந்தோர் முன்

## நேர்முகப்பரீட்சையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

வவுனியா, திங்கள்

தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த பலர் வவுனியா கல்விக்கந்தோருக்கு முன்னிலையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த சனியன்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200 பட்டதாரிகள் சுலோக அட்டைகளை தாங்கிய வண்ணம் கலந்து கொண்டனர்.

வவுனியா கல்விக்கந்தோரில் இந்த ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடந்து கொண்டிருந்த வேளையிலேயே கந்தோருக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆசிரியபதவிக்கு விண்ணப்பித்திருந்த பலருக்கு நேர்முகப் பரீட்சைக்குஅழைப்புக்கிடைக்காதமையினுலேயேஇந்தஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை.

### நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

இதேசமயம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களது நேர்முகப் பரீட்சை ஆர்ப்பாட்டக்காரர்களது கோரிக்கையை அடுத்து ஒத்திவைக்கப்பட்டது.

அனுராதபுரம், மன்னர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களது நேர்முகப் பரீட்சை தொடர்ந்து நடைபெற்றது. கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (இ)

## "எம்.பி. க்களின் பென்சனை எதிர்க்கிறேம்"

யாழ்ப்பாணம், செவ்.

''ஆட்சிமன்றத்தில் சம்பளம் பென்சன்பெறும் கொள்கையை நிராகரித்து நாம் மேதினம் கொண்டாடுகிறேம்'' என்று யாழ்ப்பாணம் சுங்க இலாகாவுக்கு முன்னுள்ள மைதானத்தில் நடந்த சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி மேதினக் கூட்டத்தில் திரு. கே. செந்தில்வேல் பேசுகையில் கூறினுர்.

மேலும் அவர் பேசுகையில் ''சிலர் தனிநாட்டுக்கான ஆதரவை எம்மிடம் எதிர்பார்க்கிருர்கள். இன்று மேதினம் நடக்காமல் இருக்கவேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றனர். ஆனுலும் பிழைப்பதற்கு எதுவுமற்ற தொழிலாளர்களாகிய நாம் துணிவுடன் இன்று மேதினம் கொண்டாடுகிறேம்'' என்று குறிப்பிட்டார்.

இக் கூட்டத்திற்கு முன்பதாக திருநெல்வேலி சந்தியிலிருந்து கூட்டமைதானம் வரை ஊர்வலம் நடைபெற்றது. (கூ-அ)

### 7வது ஆண்டுப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை கல்வி,கலை பண்பாட்டுக் காப்புக் கழக 7வது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை காலை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் கலைமண்டபத்தில் நடைபெறுகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகும் இக்கூட்டத்தில் தவத்திரு சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருட்திரு.சே. தனிநாயகம் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

'செஞ்சொற் செம்மணி' சிவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை வழங்குவார்.

புதிய ஆட்சிக்குழு தெரிவும் இடம்பெறும். (இ)

# கௌதமர் புத்தரான தினம் இன்று

— நிலமே றணசிங்க —

இன்றையைப்போல் ஒரு மங்களமான காலைப்பொழுதில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருக்கும்போது, எந்தவித தெய்வீக சக்தியின் வழிகாட்டலோ, உதவியோ இல்லாமல், தம் சுயமுயற்சியினுலும் ஞானததினுலும் தம்மிடமிருந்த களங்கங்களை களைந்தெரிந்து தம்மைப் பரிசுததராக்கிக்கொண்டார் கௌதமர். உலகின் உண்மைநிலையை உணர்ந்து சிததார்தத கௌதமர் தமது 35வது வயதில் எவராலும் இலகுவில் அடையமுடியாத பரிபூரண ஞானம் உதிக்கப்பெற்றுப் புத்தரானுர்.

உங்களுக்கு நீங்களே புகலிடமாக இருந்துகொள்ளுங்கள். உங்களுக்கு நீங்களே அடைக்கலமாக இருங்கள். மற்றறவர்களிடம் அடைக்கலம் புகவேண்டாம். உயர்ந்தவனே தாழ்ந்தவனே ஞானியோ கொலைகாரனே என்ற பாகுபாடற்று எவரும் மனம் திரும்பி ஒரு புதிய வாழ்க்கையை நடாத்தச் செய்வார்களானுல், அவர்களுக்கு வாழ்க்கையில் வெற்றியும் செழிப்பும் காத்திருக்கும்'' என்று புத்த பெருமான் கூறினுர்.

பிரபல இந்திய தத்துவ ஞானி சர்வபள்ளி இராதாக்கிருஷ்ணன் பின்வருமாறு கூறுகிருர். ''மனித குலத்தின் சிந்தனையிலும் வாழ்க்கையிலும் உண்டாக்கிய விளைவினைப் பொறுத்த வரையில் வேறெவருக்கும் குறையாத ஒரு மாபெரும் சிந்தனைச்சிற்பியாகக் கௌதமபுத்தரை நாம் காண்கிறேம். மேலும் அவர் மற்றெவரிலும் பார்க்க பரப்பிலும் ஆழத்திலும் குறைவில்லாத பற்றினையுடைய மதமரபு ஒன்றினை நிறுவியவராக மதிபபோடு கருதப்படுகின்றுர் அவர் உலகின் சிந்தனை வரலாற்றிலும் நாகரிகமடைந்த மக்களின் முதுசொத்திலும் தனியொருவராக விளங்குகின்றுர். ஏனெனில் அறிவாற்றலையும் மனமார்ந்த ஒழுக்கம் ஆத்மீக நுண்ணறிவு முதலிய அம்சங்களைக் கொண்டு மதிப்பிடும்போது புத்தர் வரலாற்றின் ஒரு மாபெரும் மனிதர் என்பதில் ஐயமில்லை.

புகழ்பெற்ற ஆங்கிலப் போறிஞரும் எழுத்தாளருமாகிய திரு,எச் ஜி. வெல்ஸ் பின்வருமாறு எழுதுகிருர். ''புத்தர் ஒருபுராணக் கதாபாத்திரம் அல்லர். உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய செய்தி ஒன்றையும் அவர் மனிதகுலத்திற்கு அருளினுர், எங்கள் நவீன கருத்துக்கள் பல அதனேடு ஒத்திருக்கின்றன. எல்லாத்துயரங்களும் அதிருப்திகளும் சுயநலத்திலிருந்தே உற்பத்தியாகின்றன எனப் புத்தர் போதித்தார். ஒருவன் மனச்சாந்தியடைய வேண்டுமானுல் அவன் தனக்காகவும் தனது ஐம்புல ஆசைகளுக்காகவும் வாழ்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.''

புத்தரால் விளக்கப்பட்ட கட்டாயமில்லாத ஒழுக்கமான; தத்துவ ஒழுங்கமைப்பு அதனைப் பின்பற்றுவோரிடமிருந்து கண்மூடித்தமானனநம்பிக்கையை எதிர்பார்க்கவில்லை இவ்வொழுங்கமைப்பு பிடிவாதக் கொள்கைளை உருவாக்கவில்லை.

மூடநம்பிக்கை நிறைந்த சடங்குகளுக்கும் ஆசாரங்களுக்கும் புத்தர் ஆதரவளிக்கவில்லை. புத்தர் எங்களுக்கு ஆச்சரியப்படத்தக்க தத்துவக் கோட்பாடுகளைத தரவில்லை. புதிய சடப்பொருள் விஞ்ஞானத்தையும் உருவாக்க முன்வரவில்லை. எங்களைப் பொறுத்த வரையில் அகத்தும் புறத்தும் உள்ளவற்றை விளக்கி, பிறப்பு இறப்புக்களுக்கு அப்பாற்பட்ட சாந்தித்திய நிலையை அடைய ஏற்றவொரு பாதையை விளக்கியுரைத்தார். இது இணையற்ற உன்னதமான ஒரு தனிச் செயலாகும். இதனுல் அவர் பல நவீன விஞ்ஞானிகளுக்கும், தத்துவஞானிகளுக்கும் ஒரு முன்னேடியாக விளங்குகிருர்.

புத்தர் கூறியதாவது: 'கேள்விப்பட்டோ, வெறும் பாரம்பரியத்துக்காகவோ, வெறும் வதந்திகளை ஆதாரமாகக் கொண்டோ, வெறும் அநுமானத்திலுலோ எதையும் ஏற்றுக்கொள்ளவேண்டாம். அது மட்டுமன்றி துறவிகள் எம்மால் மதிக்கப்படுகிறவர்கள். ஆனபடியால் அவர்கள் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளலாம் என்று எதையும் ஏற்றுக் கொள்ளவேண்டாம். குற்றத்திற்குரிய பெரியோர்களினுல் கண்டிக்கப்படும் செய்கைகளினுல் விலகிவிடவேண்டும். ஒழுக்கமான குற்றமற்ற பெரியோர்களினுல் போற்றப்படும் செய்கைகள் என அறியும்போது அவைகளை மேற்கொள்ளவேண்டும். எனது போதனையைக் கடைப்பிடிப்பவனே எனக்கு மிகுந்த மதிப்பைத் தருபவனுவான். தர்மத்தைப் புரிந்துகொள்பவனுவான்.''

பௌத்தத்தில் மன்றுடி அல்லது வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனைகள் இல்லை. புத்தபிரான் வரமளிப்பதில்லை. மன்றுடி வேண்டும். வழிபாட்டுக்குப் பதிலாக, தன்னடக்கம், சுத்தி, ஞானம் ஆகியவற்றைத் தரும் தியான மார்க்கத்தைக் கொண்டது பௌத்தம். பௌத்தத்தில் தேவரோ, தேவ தூதர்களோ இல்லை. தெய்வத்தின் அல்லது மதகுருக்களின் உதவியின்றித் தன் சுயமுயற்சியின் மூலம் துக்கத்திலிருந்து நிவாரணம் பெறமுடியுமெனப் போதிக்கின்றது பௌத்தம். (இ)

### ஈழத்து நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழகத்தில் இருந்து வருகை தந்த திருவாளர் பா.உ. சண்முகம், ஆற்காடு வீராசாமி, நஞ்சில் மனேகரன் ஆகியோர்க்கு ஈழத்து நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

தந்தை செல்வாவின் அட்டைப்படம் பொறித்த ''சுடர்'' இதழ்களும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் தெருப்புலவன் சுவர்க்கவிதை, சோழு சுதந்திரமா போன்ற நூல்களும், மற்றும் தாயகம் மீட்போம், சிவகுமார் என்றிடும் போதினிலே போன்ற நூல்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்நூல்களை ஈழவேந்தன் அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினுர். (கி-உ)

# 'இந்த யுகத்தின் அவதாரபுருஷர்''

## தந்தை செல்வாவுக்கு ஆற்காடு வீராசாமி அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்.

''ஈழத் தமிழரின் இதய ஒளி அணைந்தது. மாசில்லா மாணிக்கம் மறைந்துவிட்டது, நமது நம்பிக்கை நட்சத்திரம் உதிர்ந்துவிட்டது. இந்த யுகத்தின் ஒரு அவதார புருஷர் நம்மை அருத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத் துயில் கொண்டுவிட்டார்'' என்று தி. மு. க. பிரமுகர் ஆற்காடு வீராசாமி தமது இரங்கலுரையில் கூறினுர்.

''ஈழம்வாழ்மக்களின் இதயத் தெய்வம் உயிருடன் போராடுவதாகச் செய்தி தமிழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டதும் தமிழக மக்கள் கண்கலங்கினுர்கள். எமது அருமை இலங்கை நண்பர்கள் தந்தைக்கு டாக்டர் ராமமூர்த்தி சிகிச்சை அளிக்கவேண்டும் என்று விரும்பி நமது தலைவர் கலைஞர் மு. கருணுநிதியுடன் தொடர்பு கொண்டதும், உடனே கலைஞர் கருணுநிதி இரவு 11 மணிக்கு டாக்டர் திரு. ராமமூர்த்தியுடன் தொடர்பு கொண்டு அவரை உடனடியாக தந்தையின் உடல் நிலையைப் பார்க்கும்படி வேண்டினுர். அவரும் அதனை ஏற்று உடனடியாக ஈழம் வந்து, இங்கிருந்த பல வைத்திய மேதைகளுடன் இணைந்து தந்தையின் உயிரைக் காப்பதற்காக அரும்பாடுபட்டார். நாமெல்லாம் 'ராமமூர்த்தி சென்றிருக்கிருர்' எப்படியும் தந்தையைக் காப்பாற்றுவார் என்றெண்ணியிருந்தோம். ஆனுல் எமையெல்லாம் தவிக்கவிட்டு அவர் மறைந்துவிட்டார். அவரது இறுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஆவலோடு ஓடிவந்த எமக்கு விமானம் சதி செய்துவிட்டது. அவரது இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கண்ணீர் விட்டுக் கதறியழுத லட்சோப லட்சம் மக்களோடு சேர்ந்து நாமும் எமது கவலையைத் தெரிவிக்க முடியாமற் போய்விட்டது. அவரது மறைவு கேட்டு தமிழக மக்களும் கதறியழுதனர். அவர்களுக்குமட்டும் இங்கு வருகின்ற வாய்ப்பிருந்திருந்தால்; தமிழகத்தின் ஒரு பகுதி நிச்சயம் இங்கு வந்திருக்கும். ஆனுல் நாம் மூவரே வர மிகச் சிரமப்பட்டோம்: தமிழக மக்களின் சார்பிலும், கலைஞர் கருணுநிதி சார்பிலும் எனது சார்பிலும் மறைந்த முதறிஞர் திரு. செல்வாவின் குடும்பத்தாருக்கும் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கும் எனது ஆழ்ந்த கூனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.''

தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலேயே திரு. ஆற்காடு வீராசாமி இவ்வாறு தெரிவித்தார். (கா)

......

### 6சர்வதேச தீர்மானங்கள்

கொழும்பு, திங்கள்

காலிமுகத்திடலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேதினக் கூட்டத்தில் ஆறுசர்வதேச ரீதியிலான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

13 ஆண்டுகளின் பின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இம்முறையே தனித்து மேதினத்தைக் கொண்டாடியது குறிப்பிடத்தக்கது. (இ)

# மேதின ஊர்வலத்தில் துப்பாக்கிசூடு; 33 பேர் பலி! 50 பேர் படுகாயம்!

## 350 பேர் கைது!!

இஸ்தான்புல், மே. 2
துருக்கியில் நடைபெற்ற மே தின ஊர்வலத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 33 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கட்பட்டது.

இஸ்தான்புல்லில் நடைபெற்ற இச்சம்பவத்தில் 50 பேர் படுகாயமடைந்தனர் என்றும் 350 பேர்வரை கைது செய்யப்பட்டனர் என்றும் அங்கிருந்து கிடைக்கப் பெற்ற செய்திகள் தெரிவித்தன.

என்றுமில்லாதவாறு இம்முறை பெருந்திரளான மக்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

# ஜெயப்பிரகாஷ் அமெரிக்கா சென்றார்

## வியாழன் சத்திரசிகிச்சை

லண்டன், மே 2
சர்வோதய தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் சத்திர சிகிச்சை ஒன்றை செய்விப்பதற்காக நேற்று அமெரிக்கா போய்ச் சேர்நதபோது விமான நிலையத்தில் பெருந்திரளான மக்கள் கூடிநின்று அவரை வரவேற்றனர்.

அமெரிக்காவில் வாழும் இந்தியர்களுடன் இந்தியத் தூதர் திரு' சேவல்சிங்கும் அவரை வேற்றார்.

### காட்டர் தந்தி

சத்திர சிகிச்சை வெற்றியுடன் முடிவடைந்து பூரண சுகமடைய தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் அமெரிக்கா சென்றடைந்த திரு. ஜெயப்பிரகாஷுக்கு தந்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

ஜெயப்பிரகாஷரை நேற்று டாக்டர்கள் பார்வையிட்டனர், வரும் வியாழக்கிழமை அவருக்கு சத்திரசிகிச்சை நடைபெறும்.

## ஜெகஜீவனுக்குப் பாராட்டு

ஜனதா கட்சியுடன் ஜனநாயக காங்கிரஸ் கட்சியை இணைப்பதென மெற்கொள்ளப்பட்ட முடிவு குறித்து ஜெகஜீவன்ராமுக்கு ஜெகப்பிரகாஷர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

லண்டனில் தம்மைச்சந்தித்த இந்தியர்களிடமும் நிருபர்களிடமும் பேசுகையில் அவர் 9 காங்கிரஸ் மாநில அரசுகளைக் கலைத்ததும் சரியானதே என்று கூறினர்.

## “நினைவாலயத்திறப்பு விழாவுக்கு மீண்டும் யாழ் வருவோம்”

### — தமிழகத்தலைவர்கள்

யாழ்ப்பாணம், செவ்.
மூதறிஞர் செல்வநாயகத்திற்கு அஞ்சலிசெலுத்துமுகமாக யாழ்ப்பாணம் வந்திருந்த தி. மு. க. முன்னல் அமைச்சரான திரு. பா. உ. சணமுகமும் ஆற்காடு வீராசாமியும் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட போது இளைஞர்களின் அன்புப் பிடியில் சிக்கித் தவித்தனர்.

''கலைஞர் இருக்கும்வரை எமக்குக் கவலை இல்லை; அண்ணாவின் தம்பி ஒரு போதும் எம்மைக் கைவிடமாட்டார்'' என்று இளைஞர்கள் முழக்கமிட்டனர்.

இவ்வேளை அவ்விடத்திற்கு வந்த திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மூதறிஞரின் இறுதியாத்திரையின் போது சமுகமளித்த பல லட்சக்கணக்கான மக்களின் உணர்ச்சிவேகத்தை திரு. சண்முகத்திடம் எடுத்துக் கூறி இவற்றை கலைஞர் மு. கருணாநிதியிடம் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

### அன்புக் கட்டளை

மீண்டும் யாழ்ப்பாணம் வரவேண்டும் என்ற இளைஞர்களின் அன்புக்கட்டளையை ஏற்ற இவர்கள் மூதறிஞரின் நினைவாலய திறப்புவிழாவுக்கு வருவோம் என்று கூறினர்.

காரில் இருவரும் புறப்பட்ட போது ''கலைஞர் வாழ்க'' என்று முழக்கமிட்ட இளைஞர்கள் உணர்ச்சி மேலீட்டுடன் திரு. சண்முகததினதும் திரு. வீராசாமியினதும் கரங்களில் முததமழை பொழிந்து தமது அதீத அபிமானததை வெளிப்படுததிக் கொண்டனர். (கி உ)

......

## சந்திரசேகர் ஜனதா தலைவர்

புதுடில்லி, மே. 2
ஜனதாகட்சியின் புதிய தலைவராக திரு. சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை தலைவராகஇருந்த பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்றைய ஜனதாகட்சிக் கூட்டத்தில் இவரது பெயரை அறிவித்தபோது பலத்த கரகோஷத்தின் மத்தியில் உறுப்பினர்கள் இவரது தலைமையைஏற்றுக்கொண்டனர். (இ)

## ‘ஈடுசெய்ய முடியாத இழப்பு’

யாழ்ப்பாணம், செவ்.
'சென்ற முப்பது வருடங்களாக நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கைக்கொண்டு ஈழத் தமிழ் பேசும் மக்களின் தன்னிகரற்ற தலைவனாக விளங்கியது மட்டுமல்லாமல் ஈழத்திருநாட்டில் அரசியலிலேயே மற்ற அரசியல் தலைவர்களும் பின்பற்றக்கூடிய வகையில்வாழ்ந்து காட்டி உலக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஈழத்துக் காந்தி தந்தை செல்வாவின் மறைவு பேர் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இந்து மக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் சகலமக்களின் மதிப்பைப் பெற்ற இப்பெரியாரின்மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தலைவனை இழந்து தவிக்கும் தமிழ் பேசும் இனத்தைச்சேர்ந்த நாம் எம்மை நாமே தேற்றிக் கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திஅடையப் பிரார்த்திப்போம்.

இவ்வாறு நல்லூர் இந்து இளைஞர் மன்றத்தின் விசேஷ கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ)

## பூதவுடலுடன் புகைப்படம்

யாழ்ப்பாணம், செவ்
அமரர் செல்வாவின்பூதவுடலைத் தரிசிப்பதற்காக வீரசிங்கம் மண்டபத்திற்குச் சென்ற பலர் அங்குநின்ற புகைப்படப் பிடிப்பாளர்களின்உதவியுடன் தந்தையின்பூதவுடலின்அருகே நின்று படம்பிடித்துக் கொண்டனர்.

## தவறுகளைச் சரிப்படுத்த மொரார்ஜி முயலுகிறார்

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் முன்னர் செய்த தவறுகளைச் சரிப்படுத்த இப்போது முயல்கிறார் என்றும் அவர் ஜனநாயகவாதியாகச் செயல்பட்டுவருகிறார் என்றும் திரு. ஜெயப்பிரகாஷர் கூறினர்.

### சிறைசெல்லுமுன் சிறுநீரக கோளாறுஇல்லை

இந்திரா ஆட்சியில் சிறைசெல்லுமுன் தமக்கு சிறுநீரக கோளாறு கிடையாது என்றும் அவர் கூறினர்.

எங்கிருந்தாலும் இந்தியாவை மறக்கவேண்டாம் என்றும் இந்தியாவுக்குகாகப் பாடுபட்டுழையுங்கள் என்றும் அவர் வெளிநாட்டில் உள்ள இந்திய மக்களைக் கேட்டுக் கொண்டார். (இ)

## “தந்தையின் கொள்கைகள் இனி வலுவடையும்”

யாழ்ப்பாணம், செவ்வாய்
''தந்தை செல்வா மறந்தும் நேர்மை, நீதி வழியில் தவறாது உழைத்து, இலங்கை அரசியல் வானில் பிரகாசித்த உத்தமர். அவர் அமரராகியபோதிலும் அவரது ஒவ்வொரு வாக்கியமும் இனிமேல் மிகவும் வலுவடையும் அவரது கொள்கைகளும் இனி அழியா வரம் பெற்றுவிட்டன. அவரது இலட்சியத்தைத் தமிழினம் அடைந்தே தீரும். அடையும் வரை தமிழினம் உறங்காது. நாம் அவருடைய வழியைப் பின்பற்றி நிதானத்துடன் நடப்பதே அவருக்குச் செய்யும் கைமாறாகும்.''

இவ்வாறு புளியம்பொக்கணை நாகேசுவரர் ஆலய முன்றலில் நடாத்தப்பட்ட கூட்டணிக் கிளையின் இரங்கற் கூட்டத்தில் தலைமைவகித்து உரையாற்றிய கூட்டணிக் கிளைத் தலைவர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினர்.

திரு. நாகேந்திரம், திரு. கா. தம்பு, திரு. மு. நல்லையா உட்படப் பலர் இரங்கலுரை நிகழ்த்தினர். 2நிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

——

# 9 மாநிலங்களிலும் ஜூன் 15க்கு முன்தேர்தல்

புதுடில்லி, மே 2
கலைக்கப்பட்ட 9 மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்களும் அடுத்த மாதம் 15-ம் திகதிக்குள் முடிந்துவிடும் என்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் தெரிவித்தார்.

இம்மாதம் 12-ம் திகதிக்குள் ஜனதா கட்சி 9 மாநிலங்களினதும் வேட்பாளர் பட்டியலை அறிவிததுவிடும் என்றும்அவர் தெரிவித்தார்.

### தி. மு. க. - ஜனதா கூட்டணி

ஜனதா - தி. மு. க. மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தேர்தல் உடன்பாட்டுக்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

### கட்சிமாறும் நிலை தடைசெய்ய சட்டம்

லோகசபையின் அடுத்த கூட்டத் தொடரின் போது கட்சி மாறுதலைத் தடைசெய்யும் சட்டம் ஒன்றை தாம் கொண்டுவர உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மாநில அரசு கலைப்பு ஜனநாயக விரோதச் செயல்

புதுடில்லி, மே 2
''9 மாநில அரசுகளையும் கலைத்தது இந்திய அரசியல் சாஸனத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானது''

இவ்வாறு காங்கிரஸ்கமிட்டி புதுடில்லியில் கூடியபோது தீர்மானித்தது.

அரசின் இச் செயல் ஜனநாயகத்துக்கு முரணானது என்று காரியக்கமிட்டிக்கூட்டத்தில் கலந்துகொண்ட சகலரும் தெரிவித்தனர்.

இதேவேளையில் ஜனதா கட்சி ஆதரவாளர்கள் அரசின் இச் செயலை ஆதரித்துள்ளனர். (இ)

## இளைஞர் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்

சென்னை, மே 2
லோகசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்த ஒன்பது மாநிலங்களினதும் அரசுகள் கலைக்கப்பட்டதனை ஆட்சேபித்து இன்று சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

இளைஞர் காங்கிரஸ் தமிழ் நாட்டுத் தலைவர் திரு. ஜெக வீரபாண்டியன் தலைமையில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

இதனையடுத்து திரு. ஜெக வீரபாண்டியன் தலைமையில் 6 பேர் அடங்கிய குழு ஒன்று தமிழ்நாடு ஆளுனர் திரு. பட்வாரியைச் சந்தித்து ஆட்சேப மகஜர் ஒன்றையும் கையளித்தது. (உ)

## இந்தியாவில் ஆளும் கட்சிகள் ஒன்றுகின?

புதுடில்லி, மே 2
ஜனதா கட்சியில் அங்கம் வகித்த நான்கு கட்சிகளும் ஒன்ருக இணைந்துகொண்டன என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஜனநாயக காங்கிரஸ்கட்சியும் ஜனதா கட்சியுடன் இணைந்து கொள்வதென தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் அறிவித்துள்ளார்.

திருவாளர்கள் சரண்சிங், பெர்னாண்டஸ், அசோக் மேத்தா ஆகியோருடன் கிருபாளினியும், திருமதி. விஜயலக்ஷ்மி பண்டிட்டும் இந்த இணைப்பு தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்த இணைப்பை திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் வரவேற்றுள்ளார்.

இவ் இணைப்பு ஏற்பட்டதால் ஜனதா கட்சிக்கு லோகசபாவில் 300 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

### அ. அ. தி. மு. க. காங்கிரஸ் கூட்டு

இதேவேளை லோகசபை தேர்தலின்போது இருந்த காங்கிரஸ், அ. இ. அ. தி. மு. க. கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் கூட்டு எதிர்வரும் சட்டசபைத் தேர்தலின் போதும் நீடிக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் இன்று சென்னையில் நிருபர்களிடம் கருத்துத் தெரிவித்தார். (உ)

## கிறிஸ்தவரை ஜனாதிபதியாக நியமிக்கவும்

சென்னை, மே 2
இத் தடவை பாரத ஜனாதிபதி பதவி ஒரு கிறிஸ்தவருக்கு வழங்கப்படவேண்டும் என்று சென்னை கிறிஸ்தவர் சங்கம் மத்தியஅரசைக் கோரியுள்ளது.

சிறுபான்மையினத்தவரான கிறிஸ்தவருக்கு இப்பதவி இதுவரையுப் அளிக்கப்படவில்லை என்று சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆளுநர், மந்திரி முதலான பதவிகளுக்கும் கிறிஸ்தவர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று சங்கம் நிறைவேற்றியுள்ள மற்றெரு தீர்மானத்தில் கோரியுள்ளது. (உ)

......

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, திங்கள்
கடந்த சனிக்கிழமை மாலை இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 97-வது இலக்க மகாஜன சம்பத சுவீப் முடிவுகள் வருமாறு:

முதல்பரிசு
30 G 0167
ரூ. 96,110

2-வது பரிசு
16 I 0036
ரூ. 96,110

3-வது பரிசு
24 T 0613
ரூ. 96,110

...—

## யாருடைய குடை?

கடந்த 29-ம் திகதி மாலை யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் அநாதரவாகக் கிடந்தெடுதத குடை ஒன்றை ஆனைக்கோட்டையைச்சேர்ந்தவரும் யாழ். பரிசுததகன்னியர் மட மாணவியுமான செல்வி யசோதாவீரசேகரம் 'ஈழநாடு' காரியாலயததில் ஒப்படைததுள்ளார். உரியவர்காரியாலய நேரததில் வந்துபெற்றுக் கொள்ளலாம்.

# லட்சோப லட்சம் மக்களை வழிநடத்தும் சக்தி செல்வாவுக்கு எவ்வாறுவந்தது?

## ஆத்மபலமே காரணம் என்கிறார் அமைச்சர் 'சூரியர்'

யாழ்ப்பாணம், செவ்

''நலிந்த உருவம். குழந்தைகளின் மழலைச் சொற்போல் பேசுவதற்கே சக்தியற்ற ஒருவர், சில வேளைகளில் நடப்பதற்குக் கூடச்சக்தியின்றியிருப்பது போல் காணப்பட்ட ஒருவர் கால் நூற்றாண்டு காலம் லட்சோபலட்சம் மக்களுக்கு வழிகாட்டும் சக்தியைப் பெற்றிருந்தார். இவர் எப்படி அச்சக்தியைப் பெற்றார் என நாம் ஆராயவேண்டும். அவர்எல்லா சக்திகளையும் விட அதற்கு மேலான ஆத்மசக்தியையும் பெற்றிருந்தார்என்பதேஅதன் இரகசியமாகும்''.

மேற்கண்டவாறு மூதறிஞர் செல்வாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி உரை நிகழ்த்திய தபாலமைச்சரும் வீடமைப்பு அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியர் தெரிவித்தார். தந்தை செல்வாவின் இறுதிக்கிரியைகள் நடந்த கடந்த சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் அங்குதிரண்டிருந்த லட்சோபலட்சம் மக்கள் மத்தியில் அமைச்சர் திரு. குமாரசூரியர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

### ஆத்மபலத்தோடு வாழ்ந்தவர்

''எங்கள் நாடு மிகப்பழைய நாடு. அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டி, நாட்டின் நிலைக்கேற்ப பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த பாரம்பரியத்திற்கு ஏற்ப, ஆத்மபலத்தோடு வாழ்ந்தார். அர்த்தநாரிஸ்வரர் போன்று பல குணங்களைகொண்டஅவர் ஏனையவரையும், தன்பால் இழுக்கக்கூடிய சக்தியைப் பெற்றிருந்தார்''.

'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்றபடி தந்தையின் கட்டளையை நிறைவேற்றக் காத்திருந்த அத்தனை இளைஞர்களின் சக்தியையும் உருவாக்கித் தந்தார்.

அமரர் பண்டாரநாயக்கா, அமரர் டட்லி, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா ஆகியோர் செல்வாவில்மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். எல்லோரும் அவருடன் பேசவேண்டுமெனவிரும்பினர்.

தமிழ்த்தலைவர்களாகவாழ்ந்தவர்கள் பலர், செல்வா ஒருவர்தான் அமரர் பண்டாரநாயக்காவுடனும், அமரர் டட்லியுடனும் ஒப்பந்தம் செய்தார். இது சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். அவரின் மறைவுநாட்டிற்குப்பேரிழப்பு. இன்றைய அரசியல் நிலைபற்றி கூட்டணியினர் செல்வாவின் தலைமையில் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திவந்தனர். அது ஒரு முடிவுக்கு வருமுன்னரே, அவர் உடல் அக்கினியில் ஜோதியாகிவிட்டது. அரசு சார்பிலும், பிரதமர்சார்பிலும். என் அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன்.

### மறக்கமுடியாத ஒரு சம்பவம்

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் அவர் என்னைச் சந்திக்க என் காரியாலயத்திற்கு வந்தார். 'லிப்ட்' பழுதடைந்துவிட்டதால் 5 மாடிக்கட்டடத்திற்கு அவர் படிகளால் ஏறிவந்தார். 74 வயதில் அவர் படிகளில் நடந்துவந்தார். இதைஅறிந்த நான் ஓடோடிச் சென்று 'ஏனய்யா இப்படி வந்தீர்கள். டெலிபோனில் பேசியிருக்கலாமே' என்றேன். 'வாருங்கள் சொல்கிறேன்' என மேலே அழைத்துச் சென்றார். எந்த ஒரு கஷ்டத்தையும் தடங்கல் என விட்டுவிட மாட்டார். தடங்கலையும் தாண்டி முன் செல்வார்.

தன் தொகுதியில் பெரிய தபால் நிலையம் ஒன்று கட்டித்தரவேண்டுமென்றுகேட்டார். 'ஏன்சார் இதைதொலைபேசியில் பேசியிருக்கலாமே என்றேன். அவர் அந்த வடமாகாணத்தமிழில், நேரில் வந்து கேட்குமாப்போல வராது' என்றார். என் நெஞ்சில் செல்வாவின் நினைவாக இந்த சம்பவம் இருக்கின்றது தமிழ் மக்கள் மாத்திரமல்ல, நாட்டின் சிங்களமக்களும் 140 லட்சம் மக்களினதும் அன்பைப் பெற்ற தலைவராக விளங்கினார்.''

### தந்தையின் இலட்சியம் நிறைவேறவெண்டும்

கவிஞர் காசி ஆனந்தன் பேசும்போது, மட்டக்களப்பிற்கு தந்தையின் பூதவுடல் கொண்டு செல்வதற்காக வந்தேன் விமானவசதி கிடைக்காததினால் அது முடியாமல் போய்விட்டது. பின் அங்கு போய் 200 இளைஞர்களுடன் லொறிகளில்வந்தேன். ஒரு விபத்தில் சிக்கியதால்இளைஞர் ஒருவருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது.

அவர் கூட்டிய அத்தனை கூட்டங்களையும் இங்குமொத்தமாகக்காண்கின்றோம்.

இறுதியில் அவர் தனித் தமிழ் ஈழம் வேண்டும் என்று கூறினார். அதை நிறைவேற்றுவதே அவருக்குச்செய்யும் கைம்மாறாகும். கிழக்கை வடக்கையும் இணைத்தபெருமை அவரையே சாரும். கிறிஸ்தவராக அவர்வாழ்ந்தபோதும், இன்று சைவமுறைப்படி தகனம்இடம் பெற்றுள்ளது. பேதங்களுக்கு அப்பால் தமிழர்களை ஒன்று சேர்ந்த பெரியார். காலம் வரும்போது அவர் லட்சியத்தை நிறைவேற்ற காத்திருக்கிறோம்.

### சத்திய மன்னர்

கூட்டணி செயல் அதிபர் திரு. அமிர்தலிங்கம் கூறியதாவது: சுகமாகதிரும்பிவருவார் என நம்பியிருந்தோம். ஆனால் எங்களை தவிக்கவிட்டு சென்றுவிட்டார் அவர் காட்டிய பாதையில் செல்ல பெரிய சேனையை திரட்டித் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் ஆரம்பித்த இயக்கம், இன்று ஆல்போல் வளர்ந்திருக்கிறது.

அவர் சத்திய மன்னராக வாழ்ந்தார் பரமவிரோதிகள் கூட அவரில் குற்றம் காண முடியாதவாறு வாழ்ந்தார். அவரின் பாதையில் செல்ல வேண்டியது நமது கடமை.

தந்தை, தலைவர் சிவசிதம்பரத்தில் சொந்தப்புதல்வராக கூடிய நம்பிக்கை வைத்திருந்தார். பெரும்படை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படை தந்தையின் லட்சியத்தை நிறைவேற்றும்.

ஒவ்வொரு கூட்டம் முடிந்ததும், இன்று கூட்டத்தில் எத்தனை ஆயிரம் என அக்கறையுடன் கேட்டார். ஆனால் இன்று திரண்டமக்கள் வெள்ளத்தை அவர் எப்படி அறிவார்.

மட்டு எம். பி. திரு. எஸ். இராசதுரை கூறியதாவது: தந்தைசெல்வாவுடன் 30 ஆண்டுகள் பழகினேன். 19 வயதில் அவர் காட்டிய வழியில் செல்ல ஆரம்பித்தேன். தன்னிகரில்லா தலைவராக விளங்கினார். கிழக்கு மாகாண உரிமையைப் பாதுகாக்கவேண்டும் என விரும்பினார். கிழக்குமாகாண மக்களை நன்கு நேசித்தார்.

### மட்டுநகரில் எடுத்த விழா

64 வயதில் மட்டுநகரில் அவருக்கு விழா எடுத்தோம். 64 மாலைகளைச் சூட்டினோம். நெல் மணிகளால் உருவான மாலைகளைச் சூட்டினோம். தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தினார். தமிழ்த் தலைவர்களை இணைத்த தனிப்பெரும் தலைவர்.

இப்போ சுவர்க்கக் கதவுகள் திறந்து அவரை வரவேற்பார்கள். தேவ தூதர்கள் அவரை படிகளில் அழைத்துச் செல்வார்கள். தேவ கன்னியர்கள் மலர் தூவி வரவேற்பார்கள். அறிஞர் அண்ணா அங்கு, தந்தை செல்வாவை ஆரத்தழுவிஅன்புடன் வரவேற்பார். அவரின் லட்சியத்தை நிறைவேற்றுவோம் என்று ஆணையிட்டுக் கூறுகிறேன்.

### அரசியலில் அப்பழுக்கற்றவர்

சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூறியதாவது:

அரசியலில் அவர் அப்பழுக்கற்றவராகத் திகழ்ந்தார். கடந்த கடந்த 30 வருடங்களாக நாட்டைக் கட்டிஎழுப்பிய பெரும்பணியில் ஈடுபட்ட தலைவரை இழந்துவிட்டோம். அரசியல் வானில் உதித்த தலைவரை இழந்துவிட்டோம்.

வடக்குத்தெற்குப் பிரச்னைகள் தீர்க்கப்படக்கூடியவை. எமக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைத்தீர்க்க அவரின் ஆற்றல், நேர்மை வழிவகுக்கும். அவருடைய வழியைப் பின்பற்றி கொள்கையைக் கடைப்பிடிக்க தமிழினம்மட்டுமன்றி, தென்னிலங்கையில் இருந்துவாழக்கூடிய அத்தனை பேரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

### முஸ்லிம்களுக்காக குரல்எழுப்பியவர்

முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் எம்.சி.எம். கலீல் கூறியதாவது:-

'தமிழினத்தின் உரிமைமறுக்கப்பட்டபோது அமரர் ஜி.ஜி. பொன்னம்பலமும், அமரர் செல்வநாயகமும் குரல் கொடுக்க ஆரம்பித்தனர் சிங்களம் தனி அரசாங்கமொழியானதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை ஆரம்பித்தது. தமிழர் பிரச்னை தீர்த்துவைக்கப்படவேண்டும். புத்தளத்தில் முஸ்லிம் இளைஞர்கள்சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது செல்வா தான் அதுபற்றி ஆட்சி மன்றத்தில் குரல் எழுப்பினார்.

### எல்லோராலும் மதிக்கப்பட்டவர்

ஐக்கியதேசியக்கட்சி உபதலைவர் திரு. ஆர். பிரேமதாசா கூறியதாவது:. அண்மைக்காலத்தில் எமது நாட்டில் உயர்ந்த மக்கள் ஒருவருக்கு இறுதிமரியாதை செலுத்துவதற்கு இங்கு திரண்டிருக்கிறோம். மறைந்த தலைவர் செல்வா, நாட்டின் ஒருபகுதியினரிடம் மட்டும் தலைவராக மதிப்புப்பெறவில்லை. இன்று எல்லா மக்களும் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்துகின்றார்கள்.

இந்த நாட்டில் எந்த ஒருமக்களும் 2ம் தரப் பிரஜைகளாக மதிக்கப்படுவது அநியாயமாகும். திரு. செல்வநாயகம் போராட்டம் நடத்தியது அதுக்காகவே.

நினைப்பதைச் செய்யும் அரசியல் வாதிகள் குறைவு. திரு. செல்வநாயகம் அந்த வழியில் வாழ்ந்த உயர்ந்த அரசியல் வாதியாவார். இந்த நாட்டில் எந்த மக்களும் இரண்டாந்தரப் பிரஜைகளாக மதிக்கப் படலாகாது.

எல்லாரும் மனிதர்களாக மதிக்கும் சமுதாயத்தை உருவாக்குவதே நாங்கள் அவருக்கு செய்யும் மரியாதையாகும். ஐக்கியதேசியக்கட்சி சார்பிலும், திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சார்பிலும் எனது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

(க-அ)

---

# "மலையக மக்களின் பிராஜாஉரிமைக்காகத் தந்தை போராடினார்'

— வித்தியானந்தன்

தந்தை செல்வாவின் அஞ்சலிக் கூட்டத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது;

''முப்பது ஆண்டுகாலமாக ஈழத்து அரசியலில் தமிழ் பேசும் மக்களுக்காக மூதறிஞர் வாழ்ந்தார். தமிழ் சங்கத்தில் நாம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியபோது மலையகத் தமிழ் மாணவர் பேசும்போது 'தமிழ் ஈழம்' மலையக மக்களுக்கு உதவாது என்று சிலர் கூறிவருகின்றார்களென்றும் எங்கோ ஒரு பூமியில் வடக்கிலோ, கிழக்கிலோ 'தமிழ் ஈழம்' உருவானால் அந்த நிமதியில், மலையக மக்கள் வாழ்வார்களென்றும் கூறினார், மலையக மக்களின் பிரஜா உரிமைக்காகத் தந்தை செல்வா போராடினார்.

ஒரு சமயம் ரயிலில் என்னுடன் அவர் யாழ்ப்பாணம் வந்தபோது அதிகாலை 5 மணிக்குதான் சாவகச் சேரியில் இறங்கவேண்டும் எனக் கூறினார். எதற்காக என்று கேட்டேன். நவரத்தினம் தேர்தலில்போட்டியிடமறுக்கிறாராம் அவரைச் சந்திக்கவேண்டும் என்றுகூறி சாவகச்சேரியில் இறங்கி விட்டார். உடல் ஏலாத நிலையிலும் அதிகாலையில் ரயில் பிரயாண அலுப்பையும் பொருட்படுத்தாமல் தமிழினத்திற்காக உழைத்தார் அவர்.

இ. தொ. கா. பொதுச்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# "நான் அஞ்சலி செலுத்தும் நிலை வருமென்று நினைக்கவில்லை"

— உடுப்பிட்டி சிவா

யாழ்ப்பாணம், செவ்.

''நடக்க முடியாத நிலையிலும் மூதறிஞர் செல்வா ஆஸ்பத்திரிக்கு வந்து என் சுகம் பற்றி அறிந்து சென்றார். நான் அவரின் மறைவுக்கு அஞ்சலி கூறும் நிலை வரும் என நினைக்கவே இல்லை.''

தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான திரு. எம். சிவசிதம்பரம் மூதறிஞரின் அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:- தமிழின் உரிமை பெறவேண்டும் என்பதற்காக, அல்லும் பகலும் உழைத்தார். முதன் முதலில் காந்தியவழியில் சட்டமறுப்பு இயக்கம் நடத்தி சிறை சென்றார். சென்ற ஆண்டுகூட யாழ்ப்பாணத்தில் சட்ட மறுப்பு இயக்கம் நடந்தபோது என்னைக் கைது செய்யுங்கள் எனக் கூறி சட்டத்தைமீறி துண்டுப்பிரசுரம் விநியோகித்தார். எம்மையெல்லாம் உற்சாகமூட்டிய பெரிய தலைவன் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்,

வடக்கு கிழக்கு யாழ். மக்கள்மட்டுமன்றி மலையகத் தமிழ் மக்களையும் சேர்த்து தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்துவதில் பெரும் பங்கெடுத்தார்.

அவர் எதுவுமே தமக்கென விட்டுச் செல்லாமல் வாழ்ந்தார். தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தப் பெரும்பாடுபட்டார். அவர் கட்டியெழுப்பிய இந்த ஒற்றுமையை எந்தக் காரணத்திற்காகவும், சிதற விடமாட்டோம். இதுதான் அவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். எந்த லட்சியத்திற்காக தம்மை முழுக்க முழுக்க அர்ப்பணித்தாரோ, 'என் தாயார் 86 வயதில் இறந்தார் நான் இன்னும் 6 வருடங்கள் உயிருடன் இருப்பேன்; என் வாழ்நாளில் தமிழ் ஈழம் காண்பேன் என்று கூறிய மூதறிஞர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். சரித்திரம் காணா சனக்கூட்டம் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்திருக்கிறது. இன்னும் சில நிமிடத்தில் அவர் அக்கினியுடன் ஜோதியாகிவிடுவார், அவர் காட்டிய ஒற்றுமை வழியில் செல்வோம்.

தமிழ் ஈழம் காண்போம் எனக் கூறிய தலைவர் இங்கில்லை; அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு தமிழ் ஈழத்தை அமைப்பதுதான். அவர் காட்டிய ஒற்றுமை வழியில் சென்று அதனை ஆயுதமாகப் பாவித்து தமிழ் ஈழம் காண்போம்.

தந்தையின் பிரிவால், அவரின் பாரியாரும், புதல்வர்களும் அழுகிறார்கள். அவர்கள்மட்டும் அழவில்லை; ஈழத்தில் வாழும் அத்தனை மக்களும் அழுகின்றார்கள். அதனால் ஆறுதலடையுங்கள். (க-அ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

2 புதிய நாஷனல் பனசோனிக். சிங்கப்பூரிலிருந்து வந்தது; றேடியோ/ரேப்றெக்கோடர். AC/ பற்றறி மொடல்; RQ 542 DS. றேடியோ/ கசற் றெக்கோடர்; AC/ பற்றறி மொடல் R 5210 B/BA. நேரில் வரவும். உபதபாற்கந்தோர், அரியாலை, யாழ்ப்பாணம். 6075

ஒரு தென்னம் தும்பு அடிக்கும் மெசினும் 25 HP மோட்டரும் விற்பனைக்குண்டு. தொடர்பு; நல்லையா தும்புத் தொழிற்சாலை, புங்குடுதீவு-1. 6080

## தவறிவிட்டது

ஞாயிறு (1-5-77) யாழ்தேவியில் சுன்னாகத்தில் சிவப்பு நிற சூட்கேஸ் தவறிவிட்டது. அதில் அத்தியாவசிய தகைமைப் பத்திரங்கள் இருப்பதால் இதுபற்றித் தகவல் கிடைத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும். இ. யோசெப் பீற்றர் C/o K. அன்ரன், தபால் நிலையம் கிளிநொச்சி. 6081

## வகுப்புகள்

ஆங்கில இலக்கிய வகுப்புக்கள் 10-5-77ல் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு: க. யோகேஸ்வரன், 274, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 6073

---

ராஜா (யாழ். நகர்)
சிவாஜி — சரோஜாதேவி
தினசரி 4 காட்சிகள்
## ஆ ல ய ம ணி
6-5-77 முதல்
## தி ரு வ ரு ள்
(ஈஸ்ட்மன் கலர்)

---

வெலிங்டன் (யாழ். நகர்)
முத்துராமன் — சுஜாதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
## வாழ்ந்து காட்டுகிறேன்

---

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
விஜயகுமார்—லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
## சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

---

13-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
## இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

---

REGAL (JAFFNA)
ஜனத்திரள் நிறைந்த 3-வது வாரம்
Daily at 4-45, 7-00 & 9-30 p.m. only

அதிசயம்! ஆனால் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.

For All Good Children From 8 to 80!

## "CIRCUS"

(A Full Length Circus Film) (Color)

From 9-5-77 ALFIE DARLING

---

RIO
Entering Jaffna with Hilarious Comedy
LAUGH - LAUGH - LAUGH
## HOLIDAY ON THE BUSES
We guarantee, you will have a really hot time.

---

## 1973ம் ஆண்டு 44-ம் இலக்க நீதிநிருவாகச் சட்டம் 283 ஆம் பிரிவின்கீழ் நிர்வாகத் தத்துவப் பத்திரம் அளிப்பதற்கான இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

காலஞ்சென்ற சண்டிலிப்பாய் சுப்பிரமணியம் குமரையாவின் மரண சாதனமெழுதாத சொத்தின் நிர்வாக விடயமாக

காலஞ்சென்றவர்

வலயம்: யாழ்ப்பாணம்.
இலக்கம்: 331.

திருமதி. குமரையா திருப்பதி, "குமரையா வளவு" 1.ம் கட்டை, சண்டிலிப்பாய்.

விண்ணப்பகாரர்

1. டாக்டர் குமரையா பாலசுப்பிரமணியம், மருந்தகத் திணைக்களம், மருத்துவப் போதனாபீடம், பேராதனை.
2. திரு. குமரையா விஜேரட்ணம், 1ம், கட்டை, சண்டிலிப்பாய்.
3. குமரையா துரைராஜா, முகாமையாளர், இலங்கை வங்கி, பதுளை.

பிரதிவாதிகள்

1977-ம் ஆண்டு மாசிமாதம் 22-ந் திகதி, 281- பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்திலுள்ள கூற்றுக்கள் முதல் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதின் பேரில் இக்கட்டளை வழங்கப்பெறும் எவராவது அல்லது வேறு யாராவது 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் போதிய காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்படி விண்ணப்பக்காரர் காலஞ்சென்றவரின் மரண சாதனமெழுதாத சொத்தின் நிர்வாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கு அவரே தகுதியுடையவர் என்றும் அவ்வண்ணம் அவருக்கே வழங்கப்படுமென்றும் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கிய அதிகாரத்தின் கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கா. கணபதிப்பிள்ளை
தத்துவ அதிகாரி.
22-2-1977.

22-4-77 காரணங்காட்டுந் திகதி 2-6-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கா. கணபதிப்பிள்ளை
தத்துவ அதிகாரி.
6077

---

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-சாவித்திரி
## வேட்டைக்காரன்

---

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-பானுமதி
## அம்பிகாபதி

---

## இராணுவத்தினர் அன்னதானம்

யாழ்ப்பாணம், செவ். வெசாக் திருநாளை முன்னிட்டு, இன்று நண்பகல், பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள், தெல்லிப்பளை ஆஸ்பத்திரியிலுள்ள 200 நோயாளிகளுக்கு அன்னதானமளிக்கின்றனர். இராணுவ முகாம் கமாண்டர் இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளார். (க-அ)

## இன்று கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், செவ். அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பியின் "சித்திர புத்திரர் திருவவதாரம்" என்ற கதாப்பிரசங்கம் இன்றிரவு 10-15 மணிக்கு இலங்கை ஒலிப்ரப்புக் கூட்டுத்தாபனத்தால் ஒலிபரப்பப்படவிருக்கிறது. (உ)

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், செவ் மிருதங்க வித்துவான் எம். என். செல்லத்துரையின் மாணவரும் கோப்பாயைச் சேர்ந்தவருமான எஸ். செம்பொற்சோதிஸ்வரசர்மாவின் மிருதங்க அரங்கேற்றவிழா இம்மாதம் 6 ம் திகதி வெள்ளிக்கிழமை கோப்பாய்வெள்ளெருவைப்பிள்ளையார் கோவிலில் நடைபெறுகிறது.

நல்லை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீபரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த அரங்கேற்றத்திற்கு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல. ஈடு 14517

உரும்பிராய் கிழக்கு உரும்பராய்
1. தம்பிராஜா கந்தசாமியும் பெண்
2. சரோஜினிதேவியும்
வாதிகள்

எதிராக

71/1, அம்மன் கோவில் றோட்டு கலட்டி, யாழ்ப்பாணம்
1. வல்லிபுரம் மகேந்திரனும் பெண்
2. செல்வராணியும்
பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோர்ட்டின் M. B. 14517ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1977ம் ஆண்டு வைகாசி மாதம் 31ந் திகதி (31-5-77) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 6,100/-ம், 2-9-1974 தொடக்கம் 31-7-75 வரை ரூபா 4,000/-க்கு 12 வீத வட்டியும், அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 514-45 சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய்க் கோவிற்பற்று, உரும்பிராய் இறை, 'மாகையப்புலம்' பர. நில. இலா. 40 கிணற்றில் பங்கும் செய்பயிர் வான்பயிர்களும். இந்தப் பரப்பு 40க்கும் எல்லை கிழக்கு அப்புக்குட்டி வயிரமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு கருணாகரப்பிள்ளையார் கோவிலாதனம். மேற்கு அப்புக்குட்டி வயிரமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு நல்லையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய்ப் பரப்பு நில. இலாச்சம் மூன்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.
2. மேற்படி உரும்பிராயிறை 'குப்பிலானும் குளங்கரையும் குளங்கரை சொக்கர் வளவும்' பர. நில. இலா. 73 1/2 கிணறுகளில் பங்கும் செய்பயிர் வான்பயிர்களும் இந்தப் பரப்பு 73 1/2க்கும் எல்லை கிழக்கு காலஞ்சென்ற அப்புக்குட்டி வயிரமுத்துவின் ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் சின்னையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு கந்தர்அப்புக்குட்டிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு தம்பையா பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் பரப்பு நில இலாச்சம் 2 குளி 13, 3/5ம் அதற்குச் சேர்ந்தவைகளும்:

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

மல்லாகம்,
21-4-77.
6078

---

## திருமணம் ஒத்திவைப்பு

கோலாலம்பூர் Dr. ஜெயம் கணேசன் அவர்களுக்கும் கொழும்பு Dr. சந்திரா முத்துக்குமாரசாமி அவர்களுக்கும் இம்மாதம் 7-ம் திகதி கோலாலம்பூரில் நடைபெறவிருந்த திருமணம் பின்போடப்பட்டுள்ளது என்பதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

சோ. அருணாசலம்
உதவி அரசாங்க அதிபர்
சங்கானை.

6079

---

## சிந்தெட்டிக் கற்பூரம் பெட்டிகளில்

கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் றோட்டுத் தெற்கு,
கொழும்பு - 10.
போன்: 24261-5

---

விண்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் (இரு வேடங்களில்) ∴ உஷா நந்தினி ∴ சௌகார் ஜானகி, ∴ சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
## மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

## போயா தினத்தையொட்டி இன்று சினிமாக்காட்சி இல்லை

ஈழநாடு
The EELANADU

# "தேர்தலில் போட்டியிட மாட்டேன்" — தங்கத்துரை

## கொடும்பாவி எரிப்புக்கும் கண்டனம்

யாழ்ப்பாணம், செவ்.

இம்முறை தேர்தலில் போட்டியிடும் நோக்கம் எனக்கில்லை. தமிழர் விடுதலைக்காக நாம்கொண்ட இலட்சியத்திற்காக தமிழர் விடுதலைக்கூட்டணியின் தொண்டனாக இருந்து தந்தை செல்வாவின் இலட்சியம் நிறைவேறும்வரை போராடுவதே எனது குறிக்கோளாகும்'.

இவ்வாறு மூதூர் தொகுதி இரண்டாவது எம்.பி. திரு.அ தங்கத்துரை நமது நிருபரிடம் தெரிவித்தார்.

நமது நிருபருக்களித்த விசேட பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழர்விடுதலைக்கூட்டணியிலிருந்து விலகி வேறு எந்தக் கட்சியிலாவது சேரும் எண்ணமோ தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள்மீது எந்த வித துரோகமோ அன்றி எந்தத் தலைவரையேனும் மாசுபடுத்தவேண்டும் என்ற நோக்கமோ எனக்கு இருந்ததுமில்லை. இனிமேல் இருக்கவும்மாட்டாது.

திருகோணமலைத் தொகுதி இளைஞர்கள் தேர்தல் நியமனங்கள் தமக்குச் சார்பாக அமையுமென எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் நியமனக்குழுவின் முடிவு வேறுவிதமாக அமைந்தமையால் கொதிப்படைந்த அவர்கள் கொடும்பாவி எரிப்பில் ஈடுபட்டதாக அறிந்தேன். அப்பொழுது நான் கொழும்பில்இருந்தேன். எனினும் சில விஷமிகள் தனிப்பட்ட விரோதத்தினாலும் கட்சியிலிருந்து என்னை விலக்க வேண்டுமென்ற நோக்கத்தினாலும் நானே இதைச் செய்யுமாறு தூண்டியதாக வீண் வதந்திகளைப் பரப்புகிறார்கள். 'கொடும்பாவி அசம்பாவிதத்திற்காக நான் மிகவும் மனவருத்தம் அடைகிறேன்.

இது எமது இயக்கத்தின் கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் சீர்குலைப்பதுடன் இயக்கத்திற்கு இழுக்கையும் தேடித்தரும்செயலாகும். இதற்காக நான் வெட்கமும் வேதனையும் அடைகிறேன். (கா-இ)

### பத்திரிகை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்முகம், அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. நாஞ்சில் மனோகரன் எம்.ஏ. மற்றும் திரு. வீராசாமி ஆகியோர் தம் கரங்களில் ஒரு 'தீப்பொறி'யை வைத்திருந்ததுடன் சில இடங்களில் அதை ஆவலுடன் படிப்பதிலும் காணப்பட்டனர். தமிழ் நாட்டுப் பத்திரிகைகளின் பாணியில் 'ஒரு தீப்பொறி' வெளிவருவதாக அவர்கள் பேசிக் கொண்டதாகத் தெரிகிறது.

# ஜீப் விபத்தில் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், செவ்வாய்

மண்கும்பானில் நடந்த ஜீப் விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் பலியானார். யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூரைச் சேர்ந்த குமரையா தேவராஜன் (வயது 24) என்பவரே இவ்விதம் பலியானவராவர்.

இவர் சென்றுகொண்டிருந்த ஜீப் மரத்துடன் மோதியதில் கண்ணாடி உடைந்து கழுத்தில் படுகாயம் ஏற்பட்டதால் மரணம் சம்பவித்ததாகத்தெரியவருகிறது. இதில் பிரயாணஞ்செய்த மற்றுமிருவர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

மண்கும்பானில் நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் நடந்தது. அவ்வழியே வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ் அதிலிருந்த பிரயாணிகளை இறக்கிவிட்டு, காயமடைந்தோரை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தது.

மரண விசாரணைக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. பலியானவர் பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகியான திரு. ஈ. கே. குமரையாவின் சிரேஷ்ட புத்திரரும் சாவகச்சேரி விற்பனைத் திணைக்கள கிளை முகாமையாளரும் ஆவார். (ஆ-கி)

## 'ஈழநாடு' விசேஷ அறிவித்தல்

'ஈழநாடு' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. எஸ். கே காசிலிங்கம் 'ஈழநாடு' விசேஷ பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார், தற்பொழுது ஈழநாட்டைப் பெற்றுக்கொள்வதிலுள்ள கஷ்டங்கள் விநியோக அபிவிருத்திக்கான யோசனைகளுக்கு விற்பனையாளர்களும், வாசகநேயர்களும் இவருடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
'ஈழநாடு'
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.

# சர்வாதிகார ஆட்சிக்கு ஐ. தே. கட்சி முயலுகிறது

## மேதினக் கூட்டத்தில் பிரதமர்

கொழும்பு, திங்.

பொய்ப்பிரசாரங்களைச் செய்து மக்களை ஏமாற்றி பாஸிஸ சர்வாதிகார ஆட்சியை அமைக்க ஐக்கியதேசியக்கட்சி முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. இவர்கள் ஆட்சி அமைப்பதற்கு மக்கள் உதவினால் நிச்சயம் மக்களுக்குத் தீமையே கிடைக்கும்''.

இவ்வாறு பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா நேற்று காலிமுகத்திடலில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேதினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

காலிமுகத்திடலில் கூடியிருந்த பெருந்திரளான மக்களமத்தியில் பிரதமர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### இதுவா ஜனநாயகம்?

1966-ம் ஆண்டு 8-ம் திகதி புத்தபிக்கு ஒருவரைப் பொலிசார் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததும் 62-ம்ஆண்டு அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்தவர்களை மீண்டும் உயர்பதவிகளில் நியமித்ததும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையா?

71-ம் ஆண்டு கிளர்ச்சி நடவடிக்கைகளை அடக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியன அல்ல என்று இப்போது கூறிவரும் கம்யூனிஸ்டுகளும் சமசமாஜிகளும் அரசிலிருந்தபோது மறுப்புத் தெரிவிக்கவில்லை.

அந்த இரு கட்சியினருக்கும் அமைச்சர் பதவி வகிக்கமட்டுமே முடிந்தது. ஆனால் சுதந்திரக்கட்சியே ஐக்கிய முன்னணியை உருவாக்கியது. அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்று உணர்ந்துகொண்டுள்ளபோ இடதுசாரியினர் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

### அரிசியை 25 சதத்திலிருந்து 75 சதமாக்கியதும் ஜே. ஆர். தான்

1952-ம் ஆண்டு 25 சதமாக இருந்த அரிசியை 75 சதமாக அதிகரித்ததும் ஜே. ஆர்தான்.

### வதந்தி! வதந்தி!!

யாழ்ப்பாணம், செவ்

முன்னாள் செனட்டர் எஸ். நடேசன் நல்லதேக சுகத்துடன் இருக்கிறார்.

கொழும்பிலுள்ள திரு. நடேசனின் இல்லத்திற்கு 'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளப்பட்டபோது திரு. நடேசனே பதிலளித்தார். நேற்றுக்காலை நடைப்பயிற்சி செய்துவிட்டு வழமைபோல் காரியங்கள் ஆற்றிக் கொண்டிருப்பதாக திரு. நடேசன் சொன்னார்.

நேற்றுக் காலைமுதல் நாள்முழுவதும் 'ஈழநாடு' காரியாலயத்திற்குக் கிடைத்த தொலைபேசி அழைப்புகளில் 'செனட்டர் நடேசன் காலமாகி விட்டாராமே உண்மையா' என்ற கேள்விதான் அதிகமாக இருந்தது. கூட்டணிப் பிரமுகர்கள் உட்படப் பலரும் மிக்கபதற்றத்துடனும் துக்கத்துடனும் இதுபற்றி விசாரித்துக் கொண்டேயிருந்தனர்.

இந்த வதந்தியைத் தொடர்ந்து செனட்டரின் இல்லத்திற்கு 'ஈழநாடு' தொடர்பு கொண்டபோது தாம் மிக்க ஆரோக்கியமாக இருப்பதாக செனட்டர் நடேசன் பதிலளித்தார், (அ)

### தந்தை...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் மக்களின் மூச்சை இழந்து தவிக்கின்றோம். தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சகல மக்களுக்கும் வழி காட்டியாக விளங்கினார் தந்தை செல்வா. அவர் ஆணையிட்டால்...

மலையகம், மட்டுநகர், திருமலை மக்களை ஒன்றுதிரட்டி 35 லட்சம் தமிழ் பேசும் மக்களுக்கு அவர் ஒரு லட்சியப் பாதையைக் காட்டினார்.

நடப்பதற்கே சக்தியற்றவர் பேசுவதற்கே முடியாமல் திண்டாடும் ஒரு மெலிந்த உருவம் ஆணையிட்டால் அதனை நிறைவேற்ற லட்சக் கணக்கான மக்கள் தயாராக இருந்தனர். சிறைசெல்லவோ தூக்குமேடை செல்லவோ துப்பாக்கியை எதிர்நோக்கவோ லட்சக்கணக்கான இளைஞர்கள் அவர் கட்டளையை எதிர்பார்த்து நின்றனர். அவர் கட்டளை வழங்காமலே பிரிந்துவிட்டார். (க-அ)

பட்டப்பகல் வேளை

# குரல்வளையும், வயிறும் வெட்டி வாலிபர் கொலை!

## மல்லாகத்தில் திகில்ச் சம்பவம்

யாழ்பாணம், செவ்.

பட்டப்பகல்வேளை சுமார் 25 வயது மதிப்பிடத்தக்க இனந்தெரியாத இளைஞர் ஒருவர் குரல்வளையும், வயிறும் வெட்டப்பட்டுப் பயங்கரப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்

நெஞ்சை உலுக்கும் இச்சம்பவம் மல்லாகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த இளைஞரது சடலம் இரத்தவெள்ளத்தில் ஒழுங்கை ஒன்றில் காணப்பட்ட தகவல் கிடைத்ததனையடுத்து சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஐ. பி. ஏ. ஏ. காதர் உடன் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணையில் ஈடுபட்டார்.

இந்த இளைஞரதுவயிறு கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக் கிழிக்கப்பட்டு குடல் வெளியேறியிருந்ததுடன் குரல்வளையும் கூரியஆயுதத்தால் வெட்டப்பட்டிருந்தது.

இக்கொலையின் பின்னணியிலுள்ள மர்மங்கள் என்ன? மர்மக் கொலைஞர்கள் யார் என்பதுபற்றிய தீவிர புலன்விசாரணைகளில் இன்ஸ்பெக்டர் காதர் ஈடுபட்டுள்ளார். (உ)

# சட்டசபைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயார்

## தேர்தல் கமிஷனர் அறிவிப்பு

சென்னை, மே 2.

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் தயாராகிவிட்டது என்று தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. ஒஸா இன்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இவ்வாக்காளர் பட்டியல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என அவர் மேலும் சொன்னார்.

வாக்காளர் பட்டியல் முழு அளவில் தயாராகிவிட்டபோதிலும் வாக்களிப்புக்கான திகதி பற்றிய மத்திய அரசின் தகவல் எதுவும் இதுவரை இல்லை என்றும் அவர் சொன்னார்.

வாக்காளர் பட்டியல் முழு அளவில் தயாராகிவிட்ட போதிலும் வாக்களிப்புக்கான திகதிபற்றிய மத்திய அரசின் தகவல் எதுவும் இதுவரை இல்லை என்றும் அவர் கூறினார்.

### எம். ஜி. ஆர். ஆதரவாளர் கோரிக்கை

இதேவேளை, தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும் என்று மத்தியஅரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று காரைக்கால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகக்கிளையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேதினத்தையொட்டி நேற்று நடைபெற்ற கட்சியின் விழாவில் சினிமா நடிகர் திரு. எஸ். எஸ். ராஜேந்திரன், பாண்டிச்சேரி முன்னாள் அமைச்சர் திரு. இராமசாமி முதலானோர் கலந்துகொண்டனர்.

முகமதலி மரைக்கார் தலைமையில் விழா நடைபெற்றது. (உ)

### திருமதி ஜி. ஜி சுந்தர் அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்

திருமதி ஜி. ஜி. பொன்னம்பலம், அவரது புதல்வர் திரு. குமார் பொன்னம்பலத்துடன் சென்று, தெல்லிப்பழையில் மூதறிஞர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் ஈழத்தொண்டர்சபை அமைப்பாளர் திரு. சி. சுந்தரலிங்கமும், பாரியாருடன் நேரில் சென்று மூதறிஞர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினர். (க-அ)

### காங்கேசனில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா சு. நடராஜா, வி. தர்மலிங்கம், மு. சிவசிதம்பரம். ஆகியோர் கலந்து கொள்வார்கள். (கா-அ)